**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**<u>DW5– OS. No. 423/2018 C/w.O.S.421/2018</u>**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி Dr.V.ஸ்ரீவித்யா, முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் :திரு.ஆனந்தகுமார் ட்ரோலியா | தொழில் : |
| த/பெ. : திரு.பன்வாரிலால் ட்ரோலியா | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

பிரவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 15 ம்பிரதிவாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துக்காட்டப்பட்டு புரிந்துகொண்டு ஒப்புக்கொண்டு அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.பிரமாண வாக்குமூலத்தில் இருக்கும் விவரங்களை நான் படித்துப் பார்த்தேன் என்றால் எனக்கு படித்துக் காண்பித்தார்கள் எனக்கு தமிழில் பேச தெரியும் கேள்வி கேட்டால் பதில் சொல்வேன். பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் போலி என்ற வார்த்தைக்கான அர்த்தம் தெரியும் போலி என்றால் பொய் என்று பொருள். என் தரப்பு ஆவணங்களாக அசல்

ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்திருக்கிறேன். அசல் ஆவணங்கள் என்ன ஆயிற்று என்று என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2.நடராஜன் என்ற நபரை நான் பார்த்தது கிடையாது. நாகராஜ் என்பவரை பார்த்திருக்கிறேன் அவரிடமிருந்து தான் நான் கிரயம் பெற்று இருக்கிறேன். நாகராஜிடம் இடம் மட்டும் தான் நான் வாங்கி இருக்கிறேன். நாகராஜ் இடம் என்ன ஆவணங்கள் பெற்று இருக்கிறேன் என்று கேட்டால் இடம் மட்டும் தான் வாங்கி இருக்கிறேன்

3.நாகராஜிடம் நான் ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை,எந்த ஆவணங்களும் நாகராஜிடம் வாங்காமல் சொத்தை மட்டும் வாங்கி விட்டேன் என்று சொன்னால் சொத்தை பார்த்தேன் அதன் பின்பு வாங்கினேன். நான் வாங்கிய ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கு நடந்து கொண்டிருந்த போதுதான் நான் சொத்து வாங்கினேன் என்றால் சரியல்ல 2005 ஆம் ஆண்டு நான் சொத்து வாங்கினேன் வழக்கு 2004 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

5. நான் வாங்கிய பூமிக்கு அத்து எப்போது பிரிக்கப்பட்டது என்று கேட்டால் நான் அத்து பிரிக்கவே இல்லை வருவாய்த்துறை ஆவணங்களில் என்னுடைய பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லி இருந்த போதிலும் வருவாய் துறை ஆவணங்களில் என்னுடைய பெயர் இருக்கிறதா என்று என்னால் குறிப்பிட்ட சொல்ல முடியாது.

6. நான் பிரமாண பத்திரிக்கையில் இரண்டு ஆவணங்கள் 1941 மற்றும் 1962 ஆவணங்களை பற்றி சொல்லியிருந்த போதிலும் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் அவற்றின் நகலை தான் நான் பார்த்தேன் முருகப் பகவானின் வாரிசு சர்டிபிகேட் வாங்கி

பார்த்தேன் என்றால் இல்லை அவருக்கு யார் யார் வாரிசுகள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

7. உயில் ஆவணத்தை நான் பார்த்திருந்த போதிலும் நகலை நான் வைத்திருக்கிறேனா என்று கேட்டால் வைத்திருக்கிறேன். ஆனால், நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. வருவாய்த்துறை ஆவணங்களின்படி அத்துக்கண்டு நான் கிரையம் பெற்ற சொத்தை பிரித்திருக்கிறேனா என்று கேட்டால் எனக்கு தெரியாது ஆனால் உயிலை பார்த்து தான் சொத்து வாங்கினேன் உயிலில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்து இருக்கிறார்கள் என்ற விவரம் எல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை.

8. முருகப்ப கவுண்டருக்கு எத்தனை மக்கள் அதில் எத்தனை பேர் பெண் மக்கள் என்றும் எனக்கு தெரியாது. ஆனால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் முருகப்ப கவுண்டரின் மகள்களுக்கு திருமணமான விபரத்தை குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் எனக்கு தெரியாது. முருகப்ப கவுண்டரின் வாரிசுகளுடன் நான் பாகம் பிரித்துக் கொண்டேனா என்று கேட்டால் எனக்கு தெரியாது.

9. வழக்கு சொத்தில் எத்தனை பாதைகள் போகிறது என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். வருவாய்த்துறை ஆவணங்களில் என்னுடைய பெயர் கண்டிருப்பதாக நான் சொல்லி இருந்த போதிலும் அது எவ்வாறு ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் உயில் சாசனத்தில் என்ன எழுதி இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

10. சிவராமலிங்கம் யார் என்று எனக்கு தெரியாது அவரை நான் பார்த்ததில்லை நடராஜ் என்ற நபரையும் தெரியாது நாகராஜா தெரியும். ஆனால், அவர் எத்தனை ஏக்கர் பூமி வாங்கி இருக்கிறார் என்ற விவரம் எல்லாம் தெரியாது உண்மையான நபர்களிடம் நான் சொத்து கிரையம் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரி

எல்லாம் முருகப்ப கவுண்டர் எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஆவணம் செல்ல தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கில் அதனால் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

11. அனைத்து தரப்பினர்களும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் இருக்கலாம் யாராவது விட்டுப் போய் இருக்கிறார்களா என்று கேட்டால் எனக்கு தெரியாது.

**19 ஆம் பிரதிவாதி குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya

Digitally signed by Dr.V.Sree Vidya
DN: cn=Dr.V.Sree Vidya, ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.